முடிவுற்றிருக்கிறது. இறுதித் தீர்ப்பு விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது. இறுதித் தீர்ப்பை விரைவில் பெற்றவுடன், மனுதாரர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கி, நிலங்களைக் கையகப்படுத்தி, இப்பகுதி மக்கள் பயனடையும் வகையில் இத்திட்டம் விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இடையில் இவ்வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதனால் தாமதமாகியிருக்கிறது. தீர்ப்பு வந்தவுடன் இழப்பீடு வழங்கப்பட்டு பணி விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறன்.

(ஈ) துறைமுகம் தொகுதி, கழிவுநீரேற்று குழாய்களைப் பெரிதாக்கி கழிவுநீரேற்று நிலையங்களைத் தரமுயர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நான் தகவல் கோரல் என்ற முறையில்தான் அனுமதித்திருக்கிறேன். சுருக்கமாக உரையை முடியுங்கள்.

திரு.பி.கே.சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சுருக்கமான முறையில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீரேற்றும் நிலையங்கள் மொத்தம் 6 இருக்கின்றன. அந்த 6–ல், 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஜட்காபுரம் கழிவுநீரேற்றும் நிலையம், 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட சட்டக் கல்லூரி கழிவுநீரேற்றும் நிலையம், 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ரிசர்வ் வங்கி கழிவுநீரேற்றும் நிலையம் ஆகிய 3 கழிவுநீரேற்றும் நிலையங்கள் வாயிலாகத்தான் துறைமுகப் பகுதியிலே வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் செல்கின்றது. இதனால் மின்ட் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய 20 தெருக்களிலும், வால்டாக்ஸ் ரோடு பகுதிகளை உள்ளடக்கிய 20 தெருக்களிலும் தினந்தோறும் காலையிலிருந்து மாலை வரை வெளியேற்றப்படும் கழிவுநீர் அப்படியே தேங்குகிறது. கழிவுநீர் மாலைக்குப் பிறகுதான் வெளியேற்றப்படுகின்றது. நாங்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் சொன்னவுடன் அவர்களும் நடவடிக்கை எடுக்கிறார்கள். ஆனால், நிரந்தரத் தீர்வாக அந்தக் கழிவுநீரேற்றுக் குழாய்களைப் பெரிதுபடுத்த வேண்டும். 100 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கழிவுநீர்க் குழாய்கள், 40 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட கழிவுநீர்க் குழாய்கள் ஆகியவற்றை பெரிதுபடுத்தி கழிவுநீரேற்று நிலையங்களை மேலும் தரமுயர்த்தினால்தான் அந்த

2018 ஜூலை 4] [திரு. பி.கே. சேகர்பாபு]

*மக்கள் கழிவுநீர் அடைப்பினால் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, சுகாதாரமான சூழ்நிலையை அடைவார்கள் என்பதைக் கருத்திலே கொண்டு, விரைந்து நடவடிக்கை எடுத்து, கழிவுநீரேற்றுக் குழாய்களை மாற்றுவதற்கும், கழிவுநீர்க் குழாய்களைப் பெரிதுபடுத்துவதற்குமுண்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. ஜெயக்குமார் அவர்கள் அங்கே *** நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் வாரியமானது கழிவுநீரைச் சுத்திகரித்தல், சுத்திகரிக்கப்பட்ட நீரை மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் மின் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட கழிவுநீரகற்றுப் பணிகளைச் செய்து வருகிறது. சென்னையிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் சுத்திகரிப்புத் திறன் நாளொன்றுக்கு 727 மில்லியன் லிட்டர் ஆகும். சென்னை மாநகர கழிவுநீர் அமைப்பு தனித் தனி சேகரிப்புப் பகுதி மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, மொத்தம் 4,500 கிலோ மீட்டர் நீளம் உள்ள கழிவுநீர் அமைப்பின்மூலம் குடியிருப்புகளிலிருந்தும், பிற கட்டடங்களிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு, 253 கழிவுநீரேற்றும் நிலையங்களின்மூலம் 12 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு, மறுபயன்பாட்டிற்கு வெளியேற்றும் வசதிகளைக் கொண்டுள்ளது. இதற்கு முன்பு 1978–ல் அமைக்கப்பட்ட குழாய்களின் நீளம் மொத்தம் 1,223 கிலோ மீட்டர்தான். இப்போது குழாய்கள் கிட்டத்தட்ட 4,500 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, அன்று நுகர்வோரின் எண்ணிக்கை 1 இலட்சத்து 14,000 ஆகத்தான் இருந்தது. இன்றைக்கு 8 இலட்சத்து 43 ஆயிரத்து 603 ஆக இருக்கின்றது.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, சென்னை மாநகராட்சி, 56–வது வார்டில் இராமசாமி தெரு, சபரிமுத்து தெரு, புதுத் தெரு, நைனியப்பன் தெரு, சண்முகராயன் தெரு, போர்ச்சுக்கல் ஒன்றாவது தெரு, போர்ச்சுக்கல் இரண்டாவது தெரு மற்றும் வார்டு எண் 59–ல் வால்டாக்ஸ் சாலை, எடப்பாளையம் தெரு சந்திப்பு, ராசப்ப செட்டித் தெரு, மின்ட் தெரு, ஏகாம்பரேஸ்வரர் கோயில் தெரு ஆகியவற்றிலிருந்து என்.எஸ்.சி. போஸ் சாலை வரையிலுள்ள கட்டடங்களிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர், இராயபுரம் கழிவுநீர் உந்து நிலையத்தில் உள்ள pumping station–ல், பெறப்பட்டு, சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்ட 600 மில்லி மீட்டர் விட்டமுள்ள கழிவுநீர் உந்து குழாய்கள்மூலம் கொடுங்கையூர் கழிவுநீர் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு, சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. இக்கழிவுநீர்க் குழாயில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட உடைப்பின் காரணமாக, சென்னை மாநகராட்சியின் 56 மற்றும் 59–வது வட்டங்களில் உள்ள தெருக்களில் 7–6–2018 அன்று தற்காலிகமாக கழிவுநீர்த்தேக்கம் ஏற்பட்டது. அக்கழிவுநீர்க் குழாயில் ஏற்பட்ட உடைப்பு, போர்க்கால அடிப்படையில், 7–6–2018 அன்று இரவே சரி செய்யப்பட்டது. தற்போது இராயபுரம் கழிவுநீரேற்று நிலையம் நல்ல முறையில் இயங்கி வருகிறது. மேலும், அந்த பைப் 50 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டது என்று உறுப்பினர் சொன்னது உண்மைதான். அதனால், 3.8 கிலோ மீட்டர் நீளத்திற்குப் போடப்பட்ட 600 மில்லி மீட்டர் விட்டமுள்ள வார்ப்பு இரும்புக் குழாயை–cast iron pipe–ஐ 750 மில்லி மீட்டர் விட்டமுள்ள புதிய இரும்புக் குழாயாக மாற்றுவதற்கு 9 கோடி ரூபாய் அளவில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதற்கு கண்டிப்பாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் காமராசர் பெயரில் இருக்கை அமைத்தல் மற்றும் மதுரை, காந்தி அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகையை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.